[Sri T. P. Elumalai] [11th February 1958

வாரம் போட்டிருக்கிறோம், எம்மாதிரியான குழப்பங்கள் நடக்கும் என்பதை அறிந்துகொண்டு, கண்ணீர் வாயு உபயோகித்தால் அதை தடுப்பதற்கு வெங்காயம் வேண்டுமென்று வெகு உஷாராக வெங்காயத்தையும் கொண்டு வந்தார்கள். கேழ்வரகை கீழே இறைத்துவிட்டால் அந்த சமயத்தில் நேருவின் கார் வேகமாக போக முடியாது, அவர்கள் அப்பொழுது என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்ற எண்ணத்திலே, கேழ்வரகு வைத்திருந்தார்கள். இம்மாதிரி பல ரூபத்தில் குழப்பத்தை விளைவிக்க அவர்கள் திட்டமிட்டிருந்தார்கள். ஆனால் சட்ட சபையிலே அங்கலாய்த்துக்கொண் பேசுகிறார்கள். ஒன்றே ஒன்று அவர்களுக்குச் சொல்லுகிறேன் மந்திரிகளும், குறிப்பாக போலீஸ் மந்திரிக்கு அவர் நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கிறார்கள். இ. வி. ராமசுவாமி நாயக்கர் அவர்கள் இந்த நாட்டிலே பல குழப்பங்களை ஏற்படுத்தி கொண்டு வந்தார்கள். அவர்கள் குழப்பங்களையெல்லாம் ஏற்படுத்துவதற்கு இடம் கொடுத்தார்கள். பிறகு நிலைமை என்ன ஆயிற்று, என்ன நடந்தது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். அவருடைய புத்தியெல்லாம் எந்த மார்க்கத்தில் சென்றிருக்கிறது ? ஆகவே, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த அண்ணாதுரை போன்றவர்கள் அதில் ஈடுபடக்கூடாது என்ற பெரும் நோக்கத்திலே, போலீஸ் அமைச்சரும் மற்ற அமைச்சர்களும் அதற்கு உதவி செய்திருக்கிறார்கள். அந்த உதவிக்காக அமைச்சர்களை பாராட்டவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த சமயத்தில் தி.மு.க. பல காரணங்கள் சொல்லுகிறார்கள். ராஜாஜி போன்றவர்களை இழுத்து சாட்சியங்கள் கொடுக்கிறார்கள். ராஜாஜி எந்த வார்த்தை சொன்னாலும் சரி, அதில் சூழ்ச்சி இருக்கும், நம்பமுடியாது என்று அவர்களே சொல்லி வந்தவர்கள். இப்போது அப்படியே தலைகீழாக திருப்பியிருக்கின்றார்கள்.

DEPUTY SPEAKER : The hon. Member will continue his speech tomorrow. The House will now adjourn and meet again to-morrow at 8-30 a.m.

The House then adjourned.

IV.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory rules, orders and notifications.

* 49. *Notification issued with G.O. Ms. No.* 104, *Public (General-M), dated 11th January* 1958, *under section* 4 *of the Madras Official Language Act*, 1956 (*Madras Act XXXIX of* 1956.) (Laid on the tabile of the House under section 6 of the Madras Official Language Act, 1956.)

50. *Notifications issued with G.O. Ms. No.* 3669, *Public* **(*Services-A*), *dated* 30*th December*** 1957, *amending the Madras Public Service Commission Regulations*, 1954, *so as to exclude the post of the District Social Education Officers from the Commission's purview.* [Laid on the table of the House under Article 320 (5) of the Constitution of India.]

B. Reports and other papers.

* 18. *Short review of activities of the Madras Record Office for the first half of* 1957–58.

* 19. *Memorandum submitted by the Government of Madras on the Report of the Official Language Commission (Both English and Tamil Copy).*

* 20. *Report on the simplification and improvement of the Sales Tax System in Madras by Dr. P. S. Lokanathan.*